**ஜனவரி – 02**

# TNPSC துளிகள்

- ஹைதராபாத்தில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சிக் குழு ஒன்று மாற்றியமைக்கப்பட்ட டிஎன்ஏவை சரிசெய்யும் ஒரு புரதத்தின் செயல்பாட்டைக் கண்டறிந்துள்ளது.
    - மாற்றியமைக்கப்பட்ட டிஎன்ஏவை சரிசெய்யும் விதமாக 'டிஎன்ஏ புரதங்கள்' எனப்படும் சிறப்பு வகைப் புரதங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டர் ஹரியானாவின் கர்னால் என்னுமிடத்தில் உள்ள புதிய அனாஜ் மண்டியில் "அடல் கிசான் மஜ்தூர் உணவகத்தினை" திறந்து வைத்துள்ளார்.
    - ரூ.10க்கு உணவைப் பெறும் வகையில் அமைந்த இந்த உணவகமானது விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பெரிதும் பயனளிக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று, இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் அணுசக்தி நிலையங்கள் குறித்த ஒப்பந்தத்தினைப் பரிமாறிக் கொண்டன. இதன் மூலம் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று அணுசக்தி நிலையங்களைத் தாக்கிக் கொள்வதை தடுக்க முடியும்.
    - இந்த நடைமுறையானது 29 ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

# தேசியச் செய்திகள்

## SDG இந்தியா குறியீடு - 2019

- நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (Sustainable Development Goals – SDG) இந்தியா குறியீடானது 2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் நிதி ஆயோக் அமைப்பால் வெளியிடப் பட்டது.
- இந்தக் குறியீடானது ஐக்கிய நாடுகள் சபையால் SDGகளாக குறிப்பிடப்பட்ட 17 இலக்குகளில் 16 இலக்குகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டது.
- இது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அளவுருக்கள் மீதான மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்கின்றது.
- இது வறுமை, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற SDGகளை மேலும் மேம்படுத்த மாநிலங்களிடையே ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்குகின்றது.
- இந்த ஆண்டறிக்கையின் படி, நீர் மற்றும் சுகாதாரம், தொழில் மற்றும் கண்டுபிடிப்புகளில் பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ள இந்தியாவின் கூட்டு மதிப்பெண் ஆனது 2018 ஆம் ஆண்டில் 57 ஆக இருந்து 2019 ஆம் ஆண்டில் 60 ஆக உயர்ந்துள்ளது.
- இருப்பினும், இந்தியாவின் முன்னேற்றத்துக்குத் தொடர்ந்து பிரச்சனைகளாக உள்ள ஊட்டச்சத்து மற்றும் பாலினம் தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து அதிக கவனம் செலுத்தும் அணுகுமுறை தேவைப் படுகின்றது.
- இதன் முதல் அறிக்கையில் 13 இலக்குகள் மற்றும் 39 குறிகாட்டிகள் இருந்தன.
- ஐ.நா. அமைப்பு கோடிட்டுக் காட்டிய 306-ல் 100 குறிகாட்டிகளில் அடங்கியுள்ள 54 இலக்குகளின் அடிப்படையில் இந்த ஆண்டு மாநிலங்கள் தர வரிசைப்படுத்தப்பட்டு உள்ளன.

In the other SDGs, the **best performers** were

1. Tamil Nadu for 'no poverty';
2. Goa for 'zero hunger', sustainable cities and communities';
3. Kerala for 'good health';
4. Himachal Pradesh for 'quality education';
5. Himachal again for 'gender equality ';
6. Andhra Pradesh for 'clean water and sanitation';
7. Sikkim for 'affordable and clean energy';
8. Telangana for 'decent work & economic growth';
9. Gujarat for 'industry, innovation and infrastructure;
10. Telangana for 'reduced inequalities';
11. 'Nagaland for 'sustainable consumption and production;
12. Karnataka for 'climate action';
13. Manipur for 'life and land';
14. Andhra Pradesh and Gujarat for 'peace, justice, strong institutions'.

***மாநிலங்களின் தர வரிசை***

- ஒட்டுமொத்த SDG குறியீட்டில் 70 மதிப்பெண்களுடன் கேரள மாநிலமானது முதல் இடத்தைப் பிடித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் 69 மதிப்பெண்கள் பெற்றுள்ளது.
- ஆந்திரா, தெலுங்கானா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் 67 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளன.
- ஒன்றியப் பிரதேசங்களிடையே சண்டிகர் ஆனது 70 மதிப்பெண்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- பீகார் மாநிலமானது மிக மோசமான செயல்பாடு கொண்ட மாநிலமாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு முதலாக மிகப்பெரிய முன்னேற்றத்தைக் காட்டும் மாநிலங்களாக உத்தரப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- உத்தரப் பிரதேசம் 29வது இடத்திலிருந்து 23வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- ஒடிசா 23வது இடத்திலிருந்து 15வது இடத்திற்கு முன்னேறியுள்ளது மற்றும் சிக்கிம் 15வது இடத்திலிருந்து 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.


***முன்னணியில் உள்ள மாநிலங்கள்***

- 2018 ஆம் ஆண்டில் முன்னணியில் உள்ள மாநிலங்கள் பிரிவில் (65-99 மதிப்பெண் வரம்பு) இமாச்சலப் பிரதேசம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில், இந்தப் பிரிவில் மேலும் ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, சிக்கிம் மற்றும் கோவா ஆகிய ஐந்து மாநிலங்கள் இணைந்ததன் மூலம் இதன் மொத்த எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது.
- மாநிலங்களானவை அவற்றின் மதிப்பெண்களின் அடிப்படையில் 4 பிரிவுகளின் கீழ் வகைப் படுத்தப்பட்டுள்ளன.
    - 0 முதல் 49 வரை – செயல்பட வேண்டிய மாநிலங்கள்
    - 50 முதல் 64 வரை – செயல்படும் மாநிலங்கள்

- 65 முதல் 99 வரை – முன்னணியில் உள்ள மாநிலங்கள்
- 100 மதிப்பெண்கள் – சாதனை படைத்த மாநிலங்கள்

***SDG பற்றி***

- 2020 ஆம் ஆண்டானது ஐ. நா பொதுச் சபையில் உள்ள 193 நாடுகளால் SDG இலக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐந்தாவது ஆண்டு நிறைவாகும்.
- SDG ஆனது 17 இலக்குகளையும், அது தொடர்புடைய 169 இலக்குகளையும் 2030 ஆம் ஆண்டிற்குள் அடைய வேண்டும்.




## ரயில்வே பாதுகாப்புப் படை - மறுபெயராக்கம்

- ரயில்வே பாதுகாப்புப் படையானது (Railway Protection Force - RPF) "இந்திய ரயில்வே பாதுகாப்புப் படை சேவை" என்று மத்திய ரயில்வே அமைச்சகத்தினால் பெயரிடப் பட்டுள்ளது.
- தற்போதைய RPF ஆனது 1957 ஆம் ஆண்டின் ரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டது.
- இந்தியாவில் 1854 ஆம் ஆண்டில் முதன்முறையாக ரயில்வே கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட போது RPF ஆனது உருவாக்கப் பட்டது.
- இருப்பினும், இது 1861 ஆம் ஆண்டு காவல்துறைச் சட்டத்தின் கீழ் முதன்முறையாக சட்ட அங்கீகாரத்தைப் பெற்றது.
- 1872 ஆம் ஆண்டில், ரயில்வே காவல்துறைக் குழுவானது ரயில்வே காவல்துறைப் படையை அமைக்க பரிந்துரை செய்தது.

### PPRTMS வலைதளம்

- அரசியல் கட்சிகள் தங்கள் விண்ணப்பங்களைக் கண்காணிக்க அனுமதிக்கும் வகையில் இந்தியத் தேர்தல் ஆணையமானது ஒரு ஆன்லைன் (நிகழ்நேர) முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த அமைப்பானது அரசியல் கட்சிகள் பதிவு கண்காணிப்பு மேலாண்மை அமைப்பு (Political Parties Registration Tracking Management System - PPRTMS) என்று அழைக்கப் படுகின்றது.
- அரசியல் கட்சிகளால் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை இந்த அமைப்பு கண்காணிக்க உள்ளது.
- இந்த முறையின் மூலம் விண்ணப்பத்தின் நிலை குறித்த தகவல்களானவை குறுந்தகவல் அல்லது மின்னஞ்சல் மூலம் பெறப்படுகின்றன.

### 27வது தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு - 2019

- 2019 ஆம் ஆண்டுக்கான தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் 27வது பதிப்பானது கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- இது "தூய்மையான, பசுமையான மற்றும் ஆரோக்கியமான தேசத்திற்கான அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு" என்றக் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.
- தொழில்நுட்ப அமர்வுகள், ‘விஞ்ஞானியைச் சந்தித்தல்’ திட்டம், தொழில்நுட்ப சிற்றங்காடிகள், குழந்தை விஞ்ஞானிகளுக்கான அறிவியல் சுற்றுப்பயணம் ஆகியவை இந்த மாநாட்டின் சிறப்பு அம்சங்களாக இருந்தன.

## சர்வதேசச் செய்திகள்

### குழந்தைகளின் நலன் குறித்த யுனிசெஃப் அறிக்கை

- யுனிசெஃப் அமைப்பானது குழந்தைகளின் நலன் குறித்த தனது ஆண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அந்த அறிக்கையின் படி, 2010 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை குழந்தைகள் மீதான தாக்குதல்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.
- எனவே இந்த நிறுவனமானது கடந்த பத்தாண்டுகளை "மோசமானப் பத்தாண்டுகள்" என்று பெயரிட்டுள்ளது.
- 1989 ஆம் ஆண்டு முதலாக இந்த வகையான வன்முறைகளை எதிர்கொள்ளும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் இந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- வடக்கு சிரியா, உக்ரைன் மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசை உள்ளடக்கிய மண்டலங்களில் இந்த வன்முறைகள் அதிகமாக உள்ளன.
- குழந்தை உரிமைகள் தொடர்பான மாநாடு 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதால் 1989 ஆம் ஆண்டானது குழந்தை உரிமைகள் ஆண்டு என்றழைக்கப் படுகின்றது.

### நெதர்லாந்து – புனைப்பெயர் நீக்கம்

- 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து ‘ஹாலந்து’ என்ற புனைப்பெயரை நீக்கப்

போவதாக நெதர்லாந்து அரசு அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளது.

- நெதர்லாந்தின் சுற்றுலா வாரியம் மற்றும் இதர ஒப்பந்தகளும் கூட தேசிய மலரான துலிப் மற்றும் "ஹாலந்து" என்ற வார்த்தையை உள்ளடக்கிய அந்நாட்டின் தேசியச் சின்னத்தை அகற்றி விட்டு, அதற்குப் பதிலாக ஆரஞ்சு நிற துலிப் மற்றும் NL என்ற சுருக்கெழுத்தைக் கொண்ட ஒரு புதிய சின்னத்தை ஏற்றுக் கொண்டுள்ளன.
- 'ஹாலந்து' என்பது நெதர்லாந்து நாட்டின் 12 மாகாணங்களில் பின்வரும் இரண்டை மட்டுமே குறிக்கின்றது.
    - ஆம்ஸ்டர்டாம் அமைந்துள்ள வடக்கு ஹாலந்து, மற்றும்
    - ரோட்டர்டாம் மற்றும் தி ஹேக் ஆகியவற்றைக் கொண்ட தெற்கு ஹாலந்து.
- ஆனால் 'ஹாலந்து' என்ற பெயர் பெரும்பாலும் முழு தேசத்தையும் விவரிக்கப் பயன்படுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## வங்கி வைப்புகளுக்கான காப்பீடு

- ரூ.1 லட்சத்துக்கும் மேல் வைப்புத் தொகை கொண்ட வங்கிக் கணக்குகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கல் குறித்து மத்திய நிதி அமைச்சகம் மற்றும் காப்பீட்டு ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையம் ஆகியன பரிந்துரைத்துள்ளன.
- தற்போது, வைப்புத் தொகைக் காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகமானது (Deposit Insurance and Credit Guarantee Corporation - DICGC) ரூ.1 லட்சம் மற்றும் அதற்குக் குறைவான வைப்புத் தொகைகளுக்கு மட்டுமே காப்பீட்டுத் தொகையைக் கொண்டுள்ளது.
- வைப்புத் தொகைக் காப்பீடு என்பது பிரீமியத்தைப் பெறுவதன் மூலம் வைப்புத் தொகையாளரின் பணத்திற்கு காப்பீட்டுப் பாதுகாப்பை வழங்குகின்றது.

### *DICGC பற்றி*

- ஒரு வங்கி திவாலாகும் நிலையில் அந்த வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய அரசாங்கமானது ரிசர்வ் வங்கியின் கீழ் DICGCஐ அமைத்துள்ளது.
- ஒவ்வொரு காப்பீட்டு வங்கியும் ஒவ்வொரு ஆண்டும் அதன் வைப்புத் தொகைகளில் 0.001% தொகையை DICGCக்குச் செலுத்துகின்றது.
- ஒரு வங்கி கலைக்கப் பட்டால், அதில் கணக்கு வைத்திருப்பவர்கள் DICGCயிலிருந்து ரூ.1 லட்சம் காப்பீட்டுத் தொகையைப் பெற உரிமை உண்டு.
- DICGC அமைப்பானது இந்த வகையான பரிவர்த்தனையை நேரடியாக வங்கியின் கணக்கு வைப்பாளர்களுடன் கையாள்வதில்லை.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் யானைகள் வசிப்பிடம் – மத்தியப் பிரதேசம்

- முதன்முறையாக யானைகளின் வசிப்பிடப் பகுதியானது, மத்தியப் பிரதேசத்தில் உள்ள பந்தவ்கர் காப்புக் காட்டில் அமைந்துள்ளது. அந்த யானைகள் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சத்தீஸ்கரில் இருந்து இங்கு வந்து குடியேறி தங்கியுள்ளன.
- பந்தவ்கர் காப்புக் காடானது மத்தியப் பிரதேசத்தின் வடகிழக்கு எல்லையிலும்

சாத்புரா மலைத்தொடர்களின் வடக்குப் பகுதிகளிலும் பரவியுள்ளது.

- 1968 ஆம் ஆண்டில், பந்தவ்கர் ஒரு தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டில் அதன் அருகில் அமைந்துள்ள பன்பதா சரணாலயத்தின் கீழ் புலிகள் திட்டப் பணியின் ஆளுகையின் கீழ் பந்தவ்கர் ஒரு புலிகள் காப்பகம் என்று அறிவிக்கப் பட்டது.
- 'நாரத பஞ்சரத்ரா' மற்றும் 'சிவ புராணம்' ஆகிய பண்டையப் புத்தகங்களின் குறிப்புகளில் இருந்து இந்த இடமானது ராமாயண இதிகாசத்துடன் தொடர்புடையது என்பதனை அறியலாம்.
- இதுவரை மத்தியப் பிரதேசத்தில் யானைகள் இருந்ததில்லை. இந்தியாவின் மத்தியப் பிராந்தியத்தில், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் (சில ஆண்டுகளுக்கு முன்பு வரை) போன்ற மாநிலங்களில் யானைகள் இனம் காணாமல் போனதற்கு எந்த காரணமும் இதுவரையில் அறியப் படவில்லை.
- மத்தியப் பிரதேசமானது புலிகள் மாநிலம் என்று அழைக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு நடந்த புலிகளின் எண்ணிக்கைக் கணக்கெடுப்பில், மத்தியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையிலான புலிகள் 526 என்ற அளவில் பதிவாகி உள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★